பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
08.08.2025 FRIDAY 6.45 AM
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடந்துள்ளதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவித்துள்ளது.
- நாட்டில் சாலை மற்றும் போக்குவரத்து உள் கட்டமைப்பு உலக தரம் வாய்ந்ததாக மாறி வருவதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.
- தமிழகத்திலிருந்து கடந்த ஆண்டு ஆயிரத்து 146 கோடி ரூபாய் மதிப்பிலான கைத்தறி பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- கடந்த ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்களை திமுக அரசு கிடப்பில் போட்டுவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைஸி தொடக்க சுற்றில் வெற்றி பெற்றார்.

>>>>><<<<<

வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடந்துள்ளதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இத்தகைய குற்றச்சாட்டுகள், பொதுமக்களை தவறாக வழிநடத்தும் குற்றச்சாட்டுகள் என்று ஆணையம் கூறியுள்ளது.

தன்னுடைய புகார்கள் உண்மை என்று திரு. ராகுல் காந்தி கருதினால், தேர்தல் விதியின் படி, சத்தியப்பிரமாணத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

வாக்காளர் பட்டியல் விஷயத்தில் அபத்தமான முடிவுகளுக்கு வருவதையும், நாட்டு மக்களை தவறாக வழிநடத்துவதையும் அவர் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தேர்தல்களை நடத்துவதில் இந்திய தேர்தல் ஆணையத்தின் நேர்மை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி எழுப்பியுள்ள கேள்விகள் அர்த்தமற்றவை என்று பிஜேபி கூறியுள்ளது.

*புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. சம்பிட் பத்ரா, அரசியல் சாசன அமைப்புகள் மீது திரு. ராகுல் காந்தி குற்றச்சாட்டுகளை முன்வைப்பத இது முதல்முறையல்ல என்றும், இதற்கு முன்பும் அவர் இவ்வாறு கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.*

*சட்டமன்ற தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்ற மாநிலங்களில் தேர்தல் ஆணையத்தின் மீது இத்தகைய குற்றச்சாட்டுகளை அக்கட்சி எழுப்பவில்லை என்றும் திரு. சம்பிட் பத்ரா சுட்டிக்காட்டினார்.*

*>>>>><<<<<*

*நாட்டில் சாலை மற்றும் போக்குவரத்து உள் கட்டமைப்பு உலக தரம் வாய்ந்ததாக மாறி வருவதாகவும், இதன் விளைவாக பயண நேரம் குறைந்து, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதாகவும் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்திய கட்டுமான இயந்திர உற்பத்தியாளர்கள் சங்கத்தின், 75வது ஆண்டு விழாவில் பேசிய அவர், இந்திய கட்டுமானத்துறை ஜப்பானை முந்தியுள்ளதாக கூறினார்.*

*உலகில் கட்டுமான இயந்திரங்களை உற்பத்தி செய்வதில் மூன்றாவது மிகப் பெரிய நாடாக இந்தியா மாறியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.*

*சாலை கட்டுமான தரத்தில் சமரசம் கொள்வதில்லை என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளதாகவும், தவறிழைக்கும் ஒப்பந்ததாரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.*

*சாலைகளில் உலகத் தரத்தில் பராமரிப்பதிலும் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவதாகவும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*தமிழகத்திலிருந்து கடந்த ஆண்டு ஆயிரத்து 146 கோடி ரூபாய் மதிப்பிலான கைத்தறி பொருட்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*

*தேசிய கைத்தறி நாள் விழாவை முன்னிட்டு, சென்னை நேற்று கைத்தறி கண்காட்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், காஞ்சிபுரம் பட்டுப்புடவைகள், கோவை போரா காட்டன் புடவைகள், பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடி புடவை உள்ளிட்ட 10 கைத்தறி பொருட்களுக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளதாக கூறினார்.*

*கைகளால் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு எப்போது சந்தை வாய்ப்புகள் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.*

*இலவச வேட்டி-சேலை மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடைகளை தயாரிக்கும் பணி கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படுவதால், அவர்களின் வாழ்வாதாரத்தை அரசு பாதுகாத்து வருவதாக அவர் கூறினார்.*

*கடந்த ஆண்டு நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட 3 கோடியே 54 லட்சம் வேட்டி-சேலைகளுக்கு நிலுவைத்தொகையுடன் சேர்த்து. அவர்களுக்கான தொகையை அரசு வழங்கியுள்ளது என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*கடந்த ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட அம்மா மினி கிளினிக் உட்பட பல்வேறு திட்டங்களை திமுக அரசு கிடப்பில் போட்டுவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*

*ஸ்ரீவில்லிப்புத்தூரில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில். பத்தாண்டுகளில் 254 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டதாகவும், 168 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.*

*திமுக தனது தேர்தல் வாக்குறுதிகளை கடந்த 4 ஆண்டுகளாக நிறைவேற்றாமல், தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்களே உள்ள நிலையில், கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குவோம் என்ற அறிவிப்பை வெளியிட்டள்ளது என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டினார்.*

*>>>>><<<<<*

*நீலகிரி மாவட்டத்தில் சமீபகாலமாக குடியிருப்பு பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.*

*இதனால், பொதுமக்களின் உயிருக்கும் விவசாயிகளின் பயிர்களுக்கும் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க, வனத்துறையினர் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – சரவணன் 50 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் புகழ்பெற்ற சிவாலயங்களில் ஒன்றான சங்கரநாராயண சுவாமி திருக்கோவிலில் ஆடித்தபசை முன்னிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் நேற்று சாமி தரிசனம் செய்தனர்.*

முக்கிய நிகழ்வான சிவபெருமாள் – கோமதி அம்மனுக்கு சங்கரநாராயணனாக காட்சியளிக்கும் அரிய நிகழ்வு நேற்று நடைபெற்றது.

அப்போது, பக்தர்கள் சுற்றுவட்டார பகுதிகளில் விளையக்கூடிய பருத்தி மற்றும் நவதானியங்களை தூவி, நேர்த்திக்கடன் செலுத்தினர்.

>>>>><<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை நிகழ்ந்த சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

சின்னசேலத்திலிருந்து பழங்களை ஏற்றி வந்த வாகனம், முன்னால் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனம் மீது மோதியதால் இந்த விபத்து நேரிட்டது.

இதில், இருசக்கர வாகனத்தில் சென்ற 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

காஸாவில் ரகசிய ஏவுகணை ஏவுதளத்தை இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் அழித்துள்ளனர்.

>>>>><<<<<

இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் அமெரிக்க பொருட்கள் மீதான வரியை குறைக்காத பட்சத்தில் இந்தியாவுடன் வர்த்தக பேச்சுக்கள் நடத்தப்படமாட்டாது என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரின் உதம்பூரில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் காயமடைந்த மத்திய ரிசர்வ் காவல்படை வீரர்கள் 18 பேரை இந்திய விமானப்படையினர் மீட்டு, மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

>>>>><<<<<

உத்ராகண்ட் மாநிலம், உத்தரகாசியில் ஏற்பட்டு வெள்ளப்பெருக்கு காரணமாக அப்பகுதிக்கு மருத்துவ குழுவினர் விரைந்துள்ளனர்.

>>>>><<<<<

பெங்களூரு லால்பாக் பூங்காவில் சுதந்திர விழா மலர் கண்காட்சியை அம்மாநில முதலமைச்சர் திரு. சித்தராமையா நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

வேளாண் பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள் செயல்பாடு மற்றும் பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு முகாமை மாநில அமைச்சர் திரு. முத்துசாமி, கோபிசெட்டிப்பாளையத்தில் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இளம் நுகர்வோருக்கான விழிப்புணர்வு என்ற தலைப்பில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் பரிசுகளை வழங்கினார்.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை பகுதியில் மகளிர் சுயஉதவி குழுவினரின் உற்பத்திப் பொருட்களை ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், தூய்மைப் பணியாளர்களுக்கு 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தூய்மைப் பணியாளர் நல வாரியத் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி வழங்கினார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைஸி, ஜெர்மனியின் வின்சென்ட் கெய்மர் ஆகியோர் தொடக்க சுற்றில் வெற்றி பெற்றனர்.

உலக தரவரிசையில் ஐந்தாம் இடத்தில் உள்ள அர்ஜுன் எரிகைஸி, 1-0 என்ற புள்ளிக்கணக்கில் அமெரிக்காவின் கிராண்ட் மாஸ்டர் Awondar-ஐ வென்றார்.

ஜெர்மனியின் வின்சென்ட் கெய்மர் 1-0 என்ற புள்ளிக்கணக்கில் இந்தியாவின் இளம் வீரர் நிஹால் சரீனை வென்றார்.

பிரணவ் - கார்த்திகேயன் முரளி ஆகியோருக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

*Anish Giri - அமெரிக்காவின் Roy Robson இடையேயான ஆட்டமும் டிராவில் முடிவடைந்தது.*

*>>>>><<<<<*

*துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முஹமதன் ஸ்போர்ட்ஸ் கிளப் அணி 3-0 என்ற கோல்கணக்கில் எல்லை பாதுகாப்புப் படை அணியை வென்றது.*

*கொல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில், எல்லைப் பாதுகாப்புப் படை அணியினர் பலமுறை முயன்றும், அவர்களது கோல் வாய்ப்புகளை முஹமதன் அணியினர் தடுத்தனர்.*

*>>>>><<<<<*

*தாய்லாந்தில் நடைபெற்று வரும் ஆசிய இளையோர் குத்துச்சண்டை போட்டியில், இந்தியாவுக்கு 12 பதக்கங்கள் கிடைப்பது உறுதியாகியுள்ளது.*

*19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் ஏற்கனவே 7 பேர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ள நிலையில், ஆடவர் பிரிவில் 5 பேர் அரையிறுதிக்கு முன்னேறி, பதக்க வாய்ப்பை உறுதிப்படுத்தியுள்ளனர்.*

*ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் Shivam, 65 கிலோ எடைப்பிரிவில் Mausam Suheg, 75 கிலோ எடைப்பிரிவில் Rahul Kundu, 85 கிலோ எடைப்பிரிவில் Gaurav, 90 கிலோ எடைப்பிரிவில் Hemant Sangwan ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*22 வயதுக்குபட்டோருக்கான  ஆசிய குத்துச்சண்டை போட்டியும், இந்த போட்டியுடன் இணைந்து நடத்தப்படுகிறது.*

*அதில் இந்திய அணியினர் 13 பதக்கங்களை உறுதிப்படுத்தியுள்ளனர்.*

*ஆடவர் பிரிவில் 5 பேர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்*

*>>>>>end<<<<<*